ஒதுக்குப் புறமாக ஒடுங்கி கூனிக் கிடந்த சக்கிலிச்சி
சபையேறி நிமிர்ந்து நின்று ஊர்ப்பணி ஆற்றுவது
ஜீரணிக்க முடியுமா பரம்பரை ஏவலர்க்கு
அடுக்குமா ஆதிக்க ஜாதிக்கு
பொறுக்குமா நம்மை ஏய்த்துப் பிழைத்து
வயிர் வளர்க்கும் கூட்டத்திற்கு

ஊரை விற்று உலையில் போட
சுயநல கூட்டம் போட்ட தாளத்திற்கு
ஆட மறுத்து உன் உயிரை பணயம் வைத்து
திமிறி எழுந்து திறம்பட பம்பரமாய் மக்கள் பணியாற்றி
மாதிய குலத்து வேணி வீராயி நீ பெற்ற விருதுகள்
கண்களை கட்டை கொண்டு உருத்தியதோ

பெண் என்றால் பேயும் இரங்கும் என்பர்
ஐந்து ஜாதி வெறி பிடித்த மிருகங்கள்
பெண் ஒருத்தி உனை சுற்றிவளைத்து
மேனியை ஆயுதத்தால் வெட்டிப்பிளந்து குதறி
கொலைவெறி தாக்குதலை நடத்தி
குற்றும் குலை உயிருமாக இரத்த வெள்ளத்தில்
தங்கை நீ மிதந்த பத்திரிக்கை செய்தி பார்த்து
படபடத்து பதரிவிட்டோம் உன் அண்ணன் நாங்கள்

இந்த மிருகங்களின் முகங்களிலே
காரி உமிழ்ந்தால் கூட நம் எச்சில் தான் வீணாகும்
ஆட்சியாளர்கள் அலட்சியம் காட்டி
நீதித்துறை நீதி வழங்கவில்லை எனில்
நம் நீலப்படை நீதிவழங்கும் என அண்ணன் அதியமான்
கூறியதை நீ சிந்திய செங்குருதியின் மீது
ஆணையிட்டு கூறுகின்றோம்.